1994 ஏப்ரல் 26]

விதத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதியமைச்சர் மூலமாக இதனை துரிதமாக ஏற்படுத்திக் கொடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன். அதேபோல மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இது அவருடைய கேள்வி இல்லை என்று சொன்னாலும்கூட முழுமையாக நிதியுதவியை எங்களுடைய கும்பகோணத்திற்கு அளித்து உதவிடுவீர்களா என்பதை நீங்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக எனக்கு பதில் கொடுப்பீர்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தின்போது அமைச்சர்களுடைய இருக்கைகளுக்குப் பக்கத்திலேயும் அமைதி காக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிகவும் நல்ல நிதியமைச்சர். அதுமட்டும் அல்ல துரிதமாகச் செயல்படக் கூடியவர்தான். எனவேதான் நிதிப் பிரச்சினை எவ்வளவு இருந்தாலும் அதை வைத்துக்கொண்டு புரட்சித் தலைவி அவர்கள் சொல்லுகின்ற திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுகின்ற திறமை அவர்களுக்கு இருக்கிறது. இந்த ஆண்டு அதைச் செய்வது என்பது கடினம் என்று எனக்கே தெரிகிறது. எனவே, அடுத்த ஆண்டு நிதியமைச்சர் அவர்களிடத்திலே இதைப்பற்றி பேசி அந்த ஆண்டினுடைய நிதி நிலைமைக்கு ஏற்ப அன்றைய நிலையை கவனத்திலே எடுத்துக்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 387, டாக்டர் மு. சீனியம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 388, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

388--

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பணிமனை அமைத்தல்.

* **23428-டாக்டர் ஜெ. பரந்தாமன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா -

[*1994 ஏப்ரல் 26*

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பேரணாம்பட்டு கிராமத்தில் 1.70 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் தரப்படும் என்பதையே உயர்த்தி கேட்காமலேயே அள்ளி அள்ளி தரும் டாக்டர் புரட்சித் தெய்வம் அரசு கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சீர் செய்யாமல் இருந்த நெடுஞ்சாலைகளை சீரமைத்து செப்பனிட்டு, நகரங்களை மாநகரங்களோடு இணைப்பதற்கு மாறாக எதிலும் எப்போதும் புரட்சி செய்யும் நம் புரட்சி அரசு அரங்கல்திருகம் போன்ற மலை குக்கிராமத்தை மாநகரோடு, தலைநகரோடு பேருந்து இயக்கி இணைத்து நம் அரசு இதுபோன்ற சாதனைகள் தொடர பணிமனை அவசியம் என்பதால் இந்த ஆண்டே ஓரிரு மாதங்களில் பணிமனைக் கட்டிடப் பணி துவக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு ஆணையிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆசை நிறைவேறுவதற்கு எனக்கும் ஆசை இருக்கிறது. இருந்தாலும்கூட அதிலே சில சிக்கல் இருக்கிறது. கோயில் நிலமாக இருக்கின்ற காரணத்தினாலே அறநிலையத் துறை சார்பாக அனுமதி பெறவேண்டியிருக்கிறது. அதேபோல பச்சை மரங்கள் இருக்கின்ற காரணத்தினாலே வனத் துறை அனுமதி பெற்று அதை வெட்ட வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துரிதமாகச் செய்ய முடியுமா என்று கேட்டால், துரிதமாக அந்த அனுமதியை அவர்கள் பெற்றுத் தருவார்களேயானால் அடுத்த நாளே இந்தப் பணிகள் துவங்கப்படும்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறை கருணையோடு அனுமதி தந்து விட்டார்கள். வனத் துறையும் அதற்கான ஆய்வை முடித்துவிட்டது. எனவே இதனுடைய திட்ட

1994 ஏப்ரல் 26]

மதிப்பீடு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன். பணிமனையுடன் நிறைய இடம் கோயில் நிலமாக இருப்பதால், வாடகை குறைவாக இருப்பதால் டையர் ரீ-ட்ரெட்டிங் போன்ற ஒரு பிரிவை பணிமனையுடன் இணைக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: தலைவர் அவர்களே, திட்ட மதிப்பீடு ஒன்றும் செய்யப்படவில்லை. நிலத்தை ஆர்ஜிதம் செய்ததற்குப் பிறகு மதிப்பீடுகள் தயாரிப்பதற்கான நடவடிக்கையை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினருடைய வேகம் எனக்குத் தெரியும். அந்த வேகத்தின் அளவுக்கு போக்குவரத்துத் துறை இயங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 389, திரு. ஆர். ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 390, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

390--

பட்டுக்கோட்டையில் துணை மின்நிலையம் அமைத்தல்.

***19632–திரு. கி.பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா –

(அ) பட்டுக்கோட்டையில் ஒரு துணை மின்நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பட்டுக்கோட்டையில் ஏற்கனவே, ஒரு 66 கி. வோ. துணை மின்நிலையம் இயங்கி வருகிறது.

(ஆ) இத் துணை மின்நிலையத்தை 110 கிலோவாட் மின் நிலையமாக மாற்றுவதற்கு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஒப்புதலையும் பெற்றுள்ளது. நிலம் கிடைக்க காலதாமதம் ஆகலாம் என்பதால் தற்போது பட்டுக்கோட்டையில் இயக்கத்தில் உள்ள 66/11 கே.வி. சக்தி கொண்ட ஒரு மின் நிலையத்திலேயே 110/11 கே.வி. மற்றும் 110/66 கே.வி. அமைக்கின்ற பணி நடப்பு நிதியாண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் துவக்கப்பட உள்ளன.